

திருவள்ளூர் மாவட்டம் திருமழிசை பேரூராட்சி மன்றத் தேர்தலில் திமுக வேட்பாளர் திருமழிசை ஜெ.மகாதேவன் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, ஆதிதிராவிட நல குழு மாநில செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, ஆகியோரிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி, எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், பேரூர், ஒன்றிய, நகர செயலாளர்கள் தி.வே.முனுசாமி, ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, சன் பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், எம்.முத்தமிழ்செல்வன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், பா.சிட்டிபாபு, பூவை நகரத் துணைத் தலைவர் க.ரீதர், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர் .



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (6.8.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சி.சமயமூர்த்தி மற்றும் சுற்றுலாத்துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இரா.செந்தில்குமார் தலைமை !

# இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் !

## ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரீம்ஸ்.இரா.மூர்த்தி உணவு வழங்குகின்றனர் !

சென்னை,ஆக.7-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்கல் (07.08.2024 புதன் கிழமை) காலை 10.30 மணயளவில் எம்.சி.ரோட்டி உள்ள அண்ணா சிலை அருகில் நடைபெறுகிறது.

இதில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமை வகிக்கிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் அஞ்சலி செலுத்தி அறுசுவை உணவு வழங்குகிறார்கள்.

அதே சமயம் காலை 7.30 மணியளவில் அண்ணா சாலையில் இருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையில் இருந்து நினைவு மண்டபம் வரை அமைதி ஊர்வலம் நடைபெறுகிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் பாகம் முகவர்கள் பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகம் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு இராயபுரம் கிழக்கு பகுதி கழக செயலாளர் இரா. செந்தில்குமார் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவுநாள்!

# நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணி! திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

நாமக்கல், ஆக. 7 -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின் ஜனநாயகத்தின் பேரியக்கமான தி.மு.க.வில் 50 ஆண்டு காலம் தனது ஒய்வறியா உழைப்பால், 5 முறை தமிழக முதலமைச்சராக சிறப்பான முறையில் பார்போற்றும் வகையில் பணியாற்றி தமிழக மக்களுக்காக எண்ணற்ற முற்போக்கு சட்டங்களையும், முன்னோடி திட்டங்களையும் நிறைவேற்றி, தமிழக அரசின் நிர்வாக வரலாற்றில் பொற்கால ஆட்சியை தந்து விண்முட்டும் சாதனைகளால் தமிழ்



நாட்டை வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் சென்று ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி சரித்திரம் படைத்தவர்.

இன்றும் மறைந்தும் மறையாமல் தமிழக மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் உலக தமிழினத்தின் ஒப்பாரும், மிக்காரும் இல்லா ஒருபெரும் தலைவர்.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரும், நூற்றாண்டு விழா நாயகருமான முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதிப்பேரணி இன்று (ஆகஸ்ட் 07) காலை 10.00 மணிக்கு திருச்செங் கோடு சட்டமன்ற தொகுதியில் திருச்செங்கோட்டில், அண்ணா சாலை முதல் நான்கு ரத வீதி வழியாக நகராட்சி அலுவலகம் முன்பு வரையிலும், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் குமாரபாளையத்தில் ஆனங்கூர் பிரிவு முதல் நகர தி.மு.க அலுவலகம் வரையிலும், பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதியில் வேலூர் நான்கு ரோடு முதல் அண்ணா சாலை வழியாக சுல்தான்பேட்டை, பாவடி தெருவில் அமைந்துள்ள கலைஞர் அரங்கம் வரையிலும் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

இந்த அமைதிப் பேரணியில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகி கள், சார்பு அணி நிர்வாகி கள், உள்ளாட்சி மன்ற பிரதி நிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஆங்காங்கு தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் தேர்வழி, ஆத்துபாக்கம், மங்காவரம், வழுதலம்பேடு, ரெட்டம்பேடு ஆகிய ஊராட்சிகள் மல்லீஸ்வரி திருமண மண்டபதில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து தீர்வு காணப்பட்ட சான்றிதழ்களை மாவட்ட கழக செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் எஸ்.ரமேஷ் பா.செ.குணசேகரன் ஜி.ரவிக்குமார் இரா.அறிவழகன் கே. ஆறுமுகம் ரவீந்திரன் மு.வேதச்சாலம், எஸ்.ராமஜெயம், சுகு எம்.ஜெயசந்திரன் ஆர்.எஸ். காளாத்தி எஸ்.உதயகுமார், எம்.கேசவன், கரீம் மெய்யழகன் உமாபதி குப்பன், பொன்சாந்தி, கிரிஜாகுமார், தினதாயளன், அறிவழகன், பா.பாரத்குமார், என்.நரேந்திரன், செந்தில், ஜெயகோபி, போண்டாசிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.



ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தலைமையில் பகுதி கழக நிர்வாகிகளான வே.டில்லிபாபு, கோடீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயா செல்வம், எம்.சையத்அபுதாஹிர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், சிறுகுறு நடுத்தர தொழிலாளர் அமைச்சர், தா.மோ.அன்பரசன், கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதாஆனந்தன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் த.வினோத்குமார்,வட்ட செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, மா.கோ. கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், கே.பாபுகுமார், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# துணை அதிபர் வேட்பாளரை அறிவித்தார் கமலா ஹாரிஸ்!

வாசிங்டன்,ஆக.7-

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை அதிபர் வேட்பாளாராக டிம் வால்ஸ் பெயரை கமலா ஹாரிஸ் நேற்று (ஆக. 6) அறிவித்தார்.

அமெரிக்காவில் ஆளும் ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகள், கமலா ஹாரிஸுக்கு ஆதரவாக வாக்களித்ததால், அக்கட்சியின் அதிகாரப்பூர்வ அதிபர் வேட்பாளராக கமலா ஹாரிஸ் தேர்வானதைத் தொடர்ந்து, தற்போது துணை அதிபர் வேட்பாளரை அவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நவம்பர் 5 ஆம் தேதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், ஜனநாயகக் கட்சி சார்பில் இம்முறையும் போட்டியிடுவதாக இருந்த ஜோ பைடன், தேர்தலில் இருந்து விலகினார்.

அவரைத் தொடர்ந்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் பெயர் முன்மொழிய ப்பட்டது. பலதரப்பிலிருந்து அவருக்கு ஆதரவு குவிந்த நிலையில், கட்சி பிரதிநிதிகள் வாக்கெடுப்பிலும் அவர் வெற்றி பெற்று ஜனநாயகக் கட்சியின் அதிகாரப்பூர்வமாக அதிபர் வேட்பாளராகியுள்ளார்.

### தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி - ஜூன் மாதம் வரை

# 6,45,296 வெளிநாட்டு - 15,49,10,708 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை!

## சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை,ஆக.7-

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் இன்று (6.8.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன் இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி.இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 6,45,296 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆகவும், 2023 ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 15,49,10,708 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத்துறைக்கு தொழில் அந்தஸ்தை வழங்கும் சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.12.92 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், தென்னிந்தியாவின் ஸ்பா என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர் வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் www.tamilnadutourism.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் யுனஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்கள், மலைகள், கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், ஏரிகள், அருங்காட்சியகங்கள், கோட்டைகள், வனஉயிரிகள், அரண்மனைகள், நினைவகங்கள், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முக்கிய சுற்றுலாத்தலங்களின் புகைப்படங்கள், சுற்றுலாத்தலங்களின் விவரங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் முக்கிய சுற்றுலாத்தலங்களின் மெய்நிகர் சுற்றுலாக்களும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் இணையதள முகவரியினை அனைத்து சுற்றுலா அலுவலர்களும் தங்கள் மாவட்டங்களில் உள்ள மக்களிடம் கொண்டு சேர்பதுடன், அவர்கள் மூலமாக வெளிநாடுகளில் உள்ள அவர்களது உறவினர்களிடமும் கொண்டு சேர்த்து, உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும். 27.9.2024 அன்று நடைபெற உள்ள உலக சுற்றுலா தின விழாவில் வழங்கப்பட உள்ள சுற்றுலா விருதுகளுக்கு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலா பங்குதாரர்களும் விண்ணப்பித்து பயன்பெற வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அலுவலர்கள், மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்

# 119வது வட்டத்தில் படத்திற்கு மாலை!

## க.வே.செழியன் அறிக்கை !

சென்னை, ஆக.7-

திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு பல்வேறு இடங்களில் படம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இது குறித்து வட்டச் செயலாளர் க.வே.செழியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் 6ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, முன்னிலையில், திருவல்லிக்கேணி பகுதி கழக செயலாளர் ARP.M.காமராஜ்,

தலைமையில் 119வது வட்டத்தில் இன்று (ஆகஸ்ட் 7) புதன்கிழமை காலை 7 மணி அளவில் அண்ணாசாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது.

ஆர்.என்.துரை, மாமன்ற உறுப்பினர் வே.கமலா செழியன், வி.என்.ராஜன், ரவிராஜ் குமார், R.பத்மாவதி, R.ரஞ்சித் குமார், L.பாலு, S.ரவீந்திரன், க.பாலாஜி, P.முனுசாமி, D.லூர்து, B.சிவா, D.ஜெயக்குமார், R.கோபு, P.ஏழுமலை, V.பாலசுப்பிரமணியம், K.தினேஷ், S.மகேஸ்வரி, E.மாரி, G.சேகர், ஆகியோர் கலந்து கொள்ள இருப்பதால் இந்த அமைதிப்பேரணி காலை 7 மணியளவில் வி.எம்.தெருவில் உள்ள நமது வட்டக்கழக அலுவலகத்திற்கு கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சிகள் - காலை 6.00 மணிக்கு அமைதி பேரணி; காலை 10.00 மணிக்கு வட்டக் கழகம் முழுவதும் படம் வைத்து, ஒலி பெருக்குதல்; பகல் 11.00 மணிக்கு இராயப் பேட்டை மருத்துவமனையில் அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெறும்.

இவ்வாறு க.வே.மோகன் (செயலாளர் 119வது வட்டம் ) தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் களியாம்பூண்டி ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நிகழ்ச்சியினை மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் தொடக்கி வைத்து கோரிக்கை மனுக்களை பெற்று, நல திட்ட உதவிகளை வழங்கினார். உடன் உத்திரமேரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய கழக செயலாளர் .கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பொ.சசிகுமார் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அண்ணன் இரா.நாகன், ஒன்றிய கவுன்சிலர்கள் சுகுணா சுந்தர்ராஜன், தயாளன், அண்ணாதுரை, களியாம்பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.வளர்மதி சுதாகர் , இளைஞர் அணி யுவராஜ் துணை அமைப்பாளர் கோபிநாதன், ஆதி, பரணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,அரசு அதிகாரிகள் ,கழக அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,பொது மக்கள் கலந்து கொண்டனர்.